2015 பிப்ரவரி 23]

இந்தக் கேள்வியைக் கேட்கும் முன்னே அதற்கு விடை அளித்த எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், இந்த வட்டாட்சியர் அலுவலகத்தைக் கட்டித் தருகிறேன் என்றும், அதற்கு மதிப்பீடு தயார் செய்யப்படுகிறது என்றும் சொன்ன மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விடத்தில் புதிய கட்டடம் கட்டித் தந்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 67-வது பிறந்த நாளில் பரிசாக வழங்க வேண்டுகிறேன். எங்கள் இதய தெய்வம், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா,

"நீங்கள் நல்லா இருக்கோணும் நாடு முன்னேற
இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற
என்றும் நல்லவங்க எல்லாரும் உங்க பின்னாலே
நீங்க நினைச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே
நீங்கள் நல்லா இருக்கோணும் நாடு முன்னேற
இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற"
(மேசையைத் தட்டும் ஒலி)

67-வது பிறந்த நாளில் அம்மா அவர்களின் மலர்ப் பாதத்தை மீண்டும் வணங்கி, வட்டாட்சியர் அலுவலகத்தை மதிப்பீடு பெற்று கட்டித் தருகிறேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து, கமிஷ்நாயகம் பகுதியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதையும் கட்டுவதற்கு தாங்கள் உதவ வேண்டுகிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

58—

வன அலுவலகக் கட்டடம்

***53533—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியிலுள்ள மாவட்ட வன அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அகவை 66 நிறைவடைந்து, நாளை அகவை 67-ல் அடியெடுத்து வைக்கும் தமிழக மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றிருக்கும் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை வடக்கு கோட்ட, மாவட்ட வன அலுவலகம் மே 2013 ஆம் ஆண்டு முதல் போளூரிலிருந்து வேலூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி பாக்மார்பேட்டை கிராமத்திற்கு அடுத்த கேளூர் காப்புக் காட்டில் முன்பிருந்த வனக் காவலர் நிலையக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது மாவட்ட வன அலுவலகம் இயங்குவதற்கு ஏற்ப பழைய கட்டடம் போதுமான வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு, மாவட்ட வன அலுவலகம் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. எனவே, இம்மாவட்ட வன அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் தேவை என்ற நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.*

திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தில் பிறந்து மீண்டும் ஜெகத்தை ஆளப்போகும் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, போளூர் சட்டமன்றத் தொகுதியில், கேளூர் வனக் காவல் நிலையத்தில் தற்காலிகமாக திருவண்ணாமலை வடக்கு மாவட்ட வன அலுவலகம் இயங்கி வருகின்றது. எனவே, மாவட்ட வன அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி, அமர்கிறேன்.*